தினமணி

## விதைகளை கவனத்துடன் வாங்குங்கள்!

First Published : 09 Nov 2011 09:23:18 AM IST

கோவை, நவ. 8: விதைப்புக்கு வாங்கும் விதைகளை விவசாயிகள் கவனத்துடன் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று, விதைச்சான்று மற்றும் அங்ககச் சான்றுத்துறை தெரிவித்துள்ளது.

÷இதுதொடர்பாக, அதன் இயக்குநர் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட அறிவிப்பு:

÷விதைகளை விதை விற்பனை உரிமம் பெற்ற கடைகளில் வாங்கவும். திறந்து வைக்கப்பட்டுள்ள பைகளில் இருந்து விதைகளை வாங்க வேண்டாம். விதைகள் வாங்கும் முன், சான்று அட்டை, விபர அட்டையில் உள்ள விவரங்களை சரிபார்க்க வேண்டும்.

÷விபர அட்டையில் காலாவதி தேதி, விதை, ரகம் போன்ற விவரங்களை சரிபார்க்கவும். விதைத்தரம் குறித்த அறிக்கைகள் உள்ளனவா என்றும் பார்க்க வேண்டும்.

÷வெளிமாநில சான்று பெற்ற விதைகளாக இருந்தால், படிவம்-2 உள்ளதா என்று பார்க்க வேண்டும். விதைகளை வாங்கும்போது விற்பனைப் பட்டியல் தவறாமல் பெற வேண்டும். விற்பனைப் பட்டியல் தேதி, வாங்கிய விதையின் பெயர், வாங்கிய விதையின் அளவு, விலை, குவியல் எண், காலாவதி தேதி போன்ற விபரங்கள் குறிப்பிட்டு விதை வாங்குபவர் கையொப்பமிட வேண்டும்.

÷விதைப்புக்குப் பயன்படுத்தும் விதைகளில் ஏதாவது பிரச்னை இருந்தால், தங்களது பகுதியில் உள்ள விதை ஆய்வு துணை இயக்குநர் (அல்லது) விதை ஆய்வாளரிடம் எழுத்து மூலமாக புகார் தர வேண்டும்.

÷மேலும் விவரங்களுக்கு, தங்கள் பகுதியில் உள்ள விதைச்சான்றுத் துறை அலுவலகங்கபிளைத் தொடர்பு கொள்ளலாம். அல்லது இயக்குநர், விதைச் சான்றளிப்பு மற்றும் அங்ககச் சான்றளிப்பு இயக்ககம், 1424-எ, தடாகம் சாலை, ஜி.சி.டி. அஞ்சல், கோவை - 641013 என்ற முகவரியைத் தொடர்பு கொள்ளலாம்.

÷தொலைபேசி 0422-243 2984. பேக்ஸ் 0422-245 7554.

**ஒரத்துப்பாளையம் அணையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம்**

First Published : 09 Nov 2011 09:30:17 AM IST

ஈரோடு, நவ.8: ஒரத்துப்பாளையம் அணையில் தேங்கிய சாயக்கழிவு நீரால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் அனைவருக்கும் நிவாரண உதவி பெற்றுத் தரப்படும் என ஆட்சியர் உறுதி கூறினார்.

÷ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பி.பி.அக்ரஹாரம் பகுதிகளில் மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் மூலம் சாயக்கழிவு நீர் வெளியேற்றப்படும் இடத்தை மாவட்ட ஆட்சியர் வே.க.சண்முகம் செவ்வாய்க்கிழமை ஆய்வு செய்தார்.

ஈரோடு பி.பி.அக்ரஹாரம் அருகில் காளிங்கராயன் வாய்க்கால் பகுதிகளையும், ஐடியா கம்பெனி பின்புறம் அமைக்கப்பட்டுள்ள கழிவுநீரை பிரித்து செல்லும் சாக்கடை பகுதிகளையும், சுண்ணாம்பு ஓடை, நொச்சிப்பள்ளம் மற்றும் பெரும்பள்ளம் ஓடை பகுதிகளையும் ஆட்சியர் ஆய்வு செய்தார்.

÷அப்போது மாசுக்கட்டுப்பாடு வாரியத்தின் அதிகாரிகளிடம் சாயக்கழிவு நீர் மற்றும் சாக்கடை நீர் எவ்வாறு வெளியேற்றப்படுகிறது என்பதையும், இதை தடுப்பதற்கு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் கேட்டறிந்தார். தோல் தொழிற்சாலைகள் மற்றும் சாய தொழிற்சாலைகள் கழிவு நீரை வெளியேற்றுவதைத் தொடர்ந்து கண்காணிக்க வேண்டுமெனவும், சுத்திகரிக்கப்படாமல் கழிவு நீரை வெளியேற்றும் நிறுவனங்கள் மீது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் எனவும் உத்தரவிட்டார். அதனைத் தொடர்ந்து சென்னிமலை அருகில் உள்ள ஒரத்துப்பாளையம் அணைக்கட்டு பகுதியினை ஆய்வு செய்த ஆட்சியர் அருகில் உள்ள விவசாயக் கிணற்று நீரை ஆய்வு செய்தார். பின்னர் ஒரத்துப்பாளையம் சாயக்கழிவு நீரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டு வருவதையும் விவசாயிகளிடம் கேட்டறிந்தார். நிவாரணத் தொகை கிடைக்கப்பெறாத விடுப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்கிட அரசிற்கு பரிந்துரை செய்யப்படும் என உறுதியளித்தார்.

÷கோட்டாட்சியர் ஆர்.சுகுமார், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்கள் அசோகன், முத்துக்கனி மற்றும் அதிகாரிகள் உடனிருந்தனர்.

## பருவ மழைக் காலத்திலும் வறண்ட நிலையில் பாலாறு: ஆய்வு நடத்துமா அரசு?

ஆர். ஜெயபிரகாஷ்

First Published : 09 Nov 2011 01:20:13 AM IST



தமிழகத்தில் உள்ள பெரும்பாலான ஆறுகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும் நிலையில்

தண்ணீர் இல்லாமல் வறண்டு கிடக்கும் பாலாற்றில் துணிகளை உலர்த்தும் சலவைத் தொ

காஞ்சிபுரம், நவ. 8: கனமழை பெய்து தமிழகத்தின் பல்வேறு ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டாலும்கூட காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஓடும் பாலாறு மட்டும் கடந்த 15 ஆண்டுகளாக நீரின்றி வறண்ட நிலையிலேயே உள்ளது. இது குறித்து ஆய்வு செய்ய தமிழக அரசு வல்லுநர் குழுவை அமைக்க வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கர்நாடக மாநிலம், கோலார் மாவட்டம் நந்தி மலையில் பாலாறு உற்பத்தியாகிறது. இது கர்நாடகத்தில் 60 மைல்களையும், ஆந்திரத்தில் 30 மைல்களையும், தமிழகத்தில் 140 மைல்களையும் கடந்து சென்னை அருகே வாயலூர் என்ற இடத்தில் வங்கக் கடலில் கலக்கிறது.

தமிழகத்தில் வேலூர், வாணியம்பாடி, வாஜாபாபேட்டை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு உள்ளிட்ட முக்கிய பகுதிகள் வழியாக பாலாறு ஓடுகிறது. பாலாற்று நீரை நம்பி ஆயிரக் கணக்கான கிராமங்களும் ஒன்றரை கோடி விவசாயிகளும் உள்ளனர். கடந்த 15 ஆண்டுகளாக எவ்வளவு கனமழை பெய்தாலும், மற்ற பகுதிகளில் வெள்ளம் வந்தாலும், காஞ்சிபுரம் மவாட்டத்தில் ஓடும் பாலாற்று பகுதியில் மட்டும் தண்ணீர் வரத்து அறவே இல்லை.

பாலாற்றில் மழையின்போது மணல் தேக்கி வைக்கும் நிலத்தடி நீரை நம்பியே விவசாய குடும்பங்கள் பல உள்ளன. சென்னை, காஞ்சிபுரம் உள்ளிட்ட நகரங்களின் குடிநீர் தேவைக்கும் பாலாற்று நீர் பயன்படுகிறது.

பாலாற்றில் மணல் அளவுக்கு அதிகமாக அள்ளப்படுவதால் நிலத்தடி நீருக்கும் தற்போது ஆபத்து ஏற்பட்டுள்ளது. காடுகள் அழிக்கப்பட்டதால் பாலாற்று படுகை பகுதியில் மழை குறைந்து குறைந்து தண்ணீர் வரவில்லை என்ற ஒரு காரணமும் கூறப்படுகிறது. ஆனாலும் பாலாற்றுக்கு

குறுக்கே அண்டை மாநிலங்களில் சட்டத்துக்கு புறம்பாக அணைகள் கட்டப்பட்டிருப்பதாகவும் சிலர் கூறுகின்றனர்.

அனைத்து ஆறுகளிலும் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும்போது பாலாற்றில் தண்ணீர் வராமல் வறண்டே காணப்படுகிறது. இதற்கான காரணங்களை தமிழக அரசு முறையாக ஆராய வேண்டும். இதற்காக ஒரு தணிக்குழுவையும் அரசு அமைக்க வேண்டும். அண்டை மாநிலங்களில் கட்டப்பட்டுள்ள அணைகள் குறித்து தமிழக அரசு வெள்ளை அறிக்கை கேட்க வேண்டும் என்றும் சமூக ஆர்வலர்கள் பலர் வலியுறுத்துகின்றனர்.

இது குறித்து பாலாறு பாதுகாப்பு கூட்டியக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் காஞ்சி அமுதனிடம் கேட்டபோது அவர் கூறியது:

பாலாற்றில் தண்ணீர் வந்து 15 ஆண்டுகள் ஆகிறது. காடுகள் அழிக்கப்பட்டதால் மழை பொழிவு இயற்கையாகவே பாலாற்றை ஒட்டியுள்ள பகுதிகளில் குறைந்துவிட்டது. மேலும் ஆற்றில் மணல் அளவுக்கு அதிகமாக அள்ளப்பட்டதால் சீரான நீரோட்டம் இல்லாமல், ஆங்காங்கே பள்ளங்களில் தண்ணீர் தேங்கி நிற்கிறது.

மேலும் அண்டை மாநிலங்கள் பாலாற்றின் குறுக்கே சட்டத்துக்கு புறம்பாக அணைகளை கட்டியுள்ளதாக கூறப்படுகிறது. அது குறித்து உண்மை நிலையை அறிந்து கொள்ள தமிழக அரசு அண்டை மாநிலங்களில் வெள்ளை அறிக்கை கேட்க வேண்டும்.

பாலாற்றில் தண்ணீர் வராததற்கான காரணத்தை ஆராய்வதற்கு வல்லுநர் குழுவை அமைக்க வேண்டும். ஒகேனக்கல் பகுதியில் வெள்ளப்பெருக்கு ஏற்படும்போது தண்ணீர் வீணாக கடலில் கலக்கிறது.

இதுபோல் வீணாகும் உபரிநீரை பாலாற்றில் விட முடியும் என்று சில பொறியாளர்கள் கூறியுள்ளனர். இது குறித்து சிலர் புத்தகங்களையும் வெளியிட்டுள்ளனர். அதுபோல் செய்வதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளனவா என்று ஆய்வுக் குழு அமைத்து தமிழக அரசு பரிசீலிக்க வேண்டும் என்றார்.

**செம்மறி ஆடுகளைத் தாக்கும் நோய்த் தடுப்பு முறைகள்: 10-ல் இலவசப் பயிற்சி முகாம்**

First Published : 08 Nov 2011 01:36:37 PM IST

நாமக்கல், நவ. 7: நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் செம்மறி ஆடுகளில் குடற்புழு நீக்கமும், தொற்றுநோய் மேலாண்மையும் என்ற தலைப்பில் ஒரு நாள் இலவசப் பயிற்சி வியாழக்கிழமை (நவம்பர் 10-ம் தேதி) நடைபெறுகிறது.

இதில், செம்மறி ஆடுகளைத் தாக்கும் நோய்கள், நோய் அறிகுறிகள், நோய் மேலாண்மை, குடற்புழு நீக்கம், தடுப்பூசி செலுத்தும் முறைகள் குறித்து விரிவான பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

விவசாயிகள், பண்ணையாளர்கள், ஊரக மகளிர், இளைஞர்கள் உள்பட ஆர்வமுள்ளவர்கள் இப்பயிற்சியில் கலந்து கொள்ளலாம். பயிற்சி பெற விரும்புவோர் நாமக்கல்-மோகனூர் சாலையில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் செயல்படும் வேளாண் அறிவியல் நிலையத்துக்கு நேரில் வந்தோ அல்லது தொலைபேசி மூலமாகவோ புதன்கிழமைக்குள் முன்பதிவு செய்து கொள்ள வேண்டும். மேலும் விவரங்களுக்கு 04286-266345, 266244, 266650 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

**மேட்டூர் அணை நீர்மட்டம்: 101.42 அடி**

First Published : 08 Nov 2011 03:29:48 PM IST

தஞ்சாவூர், நவ. 7: மேட்டூர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை மாலை 101.42 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 19,557 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையில் இருந்து வினாடிக்கு 1,000 கன அடி தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையில் இருந்து வினாடிக்கு காவிரியில் 1,010 கன அடி, வெண்ணாற்றில் 510 கன அடி, கல்லணைக் கால்வாயில் 1,011 கன அடி, கொள்ளிடத்தில் 6,873 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

**அனைத்து வேளான் பொருள்களையும் அரசே கொள்முதல் செய்ய வேண்டும்**

First Published : 08 Nov 2011 01:21:31 PM IST

தருமபுரி, நவ.7: அனைத்து வேளான் விளைபொருள்களையும் அரசே நேரடியாகக் கொள்முதல் செய்ய வேண்டும் என்று தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாநிலப் பொதுச் செயலர் வே.துரைமாணிக்கம் கூறினார்.

தருமபுரியில் திங்கள்கிழமை நடைபெற்ற தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாவட்ட பேரவைக் கூட்டத்தில் பங்கேற்ற அவர் கூறியது:

விவசாயத் தொழில் இதுவரை இல்லாத அளவுக்கு நெருக்கடி நிலையைச் சந்தித்துள்ளது. உரங்கள், பூச்சி மருந்துகள் விலை உயர்வு காரணமாக விவசாய உற்பத்திச் செலவு 15 முதல் 20 சதவீதம் வரை உயர்ந்துவிட்டது.

சன்னரக நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ.1,180 என்றும் 2-வது ரக நெல்லுக்கு 1,130 என்றும் மத்திய அரசு விலை நிர்ணயம் செய்துள்ளது.

காவிரி டெல்டா மாவட்டங்கள் தவிர பிற மாவட்டங்களில் விவசாயிகளுக்கு இந்த விலை கிடைப்பதில்லை. 17 சதவீத ஈரப்பதம் உள்ள நெல் தான் கொள்முதல் செய்யப்படும் என்ற மத்திய

உணவுக் கழகத்தின் விதிமுறை இயற்கைக்கு மாறாக உள்ளது. 24 சதவீத ஈரப்பதம் உள்ள நெல் வரை கொள்முதல் செய்ய வேண்டும். விவசாயிகளிடம் கொள்முதல் செய்யும் விலையைவிட 50 முதல் 60 சதவீதம் கூடுதல் விலைக்கு வியாபாரிகள் விற்பனை செய்யவதால் நுகர்வோர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

எனவே, அனைத்து வேளான் விளைபொருள்களையும் அரசே நேரடியாக கொள்முதல் செய்து விவசாயிகளுக்கும், நுகர்வோர்களுக்கும் நியாயமான விலை கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தருமபுரி, கிருஷ்ணகிரி, தேனி, திண்டுக்கல், சேலம் உள்ளிட்ட பழங்கள், காய்கறிகள் அதிகம் விளையும் மாவட்டங்களில் குளிர்பதன கிடங்கு வசதியை மத்திய, மாநில அரசுகள் ஏற்படுத்த வேண்டும்.

சிப்காட் போன்ற ஆலைகளை அரசு அமைக்கும்போது விவசாய நிலங்களை கையகப்படுத்தக்கூடாது என்றார்.

**சிவகாசியில் 82.4 மி.மீ. மழை**

First Published : 08 Nov 2011 11:33:58 AM IST

சிவகாசி, நவ. 7: சிவகாசியில் ஞாயிற்றுக்கிழமை இரவு 82.4 மி.மீ. மழை பெய்துள்ளது. அதே நாளில் ஸ்ரீவில்லிபுத்தூரில் 77.6. மி.மீ., சாத்தூரில் 5 மி.மீ., ராஜபாளையத்தில் 58 மி.மீ., பிளவக்கல் அணை 34.2 மி.மீ., வத்திராயிருப்பில் 44 மி.மீ., வெம்பக்கோட்டையில் 3.5 மி.மீ. மழையும் பெய்துள்ளது.

தினமலர்
உண்மையின் உரைகல்

## திப்பிலி - மருத்துவ பயிர்

பதிவு செய்த நாள் : நவம்பர் 09,2011,00:00 IST



வெள்ளானிக்கரா 1 (விஸ்வம் திப்பிலி) என்ற உயர் விளைச்சல் திப்பிலி ரகம் கேரள மாநிலத்திலிருந்து 1994ம் ஆண்டு வெளியிடப்பட்டது. ஏற்காடு தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்தில் ஏற்காடு பி.எல்.9 என்ற தேர்வு தமிழகத்தில் சாகுபடி செய்வதற்காக பரிந்துரைக்கப் பட்டுள்ளது. இந்த ரகத்தேர்வு முன்கூட்டியே காய்த்து அதிகக் காய்களை மகசூலாகத் தரும் தன்மை உடையது.

அதிக அளவு காற்றில் ஈரத்தன்மை உள்ள தாழ்வான மலைச்சரிவுகளில் பயிர் செய்ய ஏற்றது. குறைந்தவு 60 சதம் ஈரத்தன்மை இருப்பது அவசியம். 30-32 டிகிரி செல்சியஸ் சாகுபடி செய்ய இயலாது. அதிகமான தட்பவெப்பநிலையைக் கொண்ட இடங்களில் சாகுபடி செய்ய இயலாது. சராசரி ஆண்டு மழையவு 150 செ.மீ.க்கும் மேல் இருப்பது நல்லது. தமிழகத்தில் 1250 மீட்டர் உயரம் உள்ள மலைப்பகுதிகள் அதாவது கிழக்குத் தொடர்ச்சி மலைச் சரிவுகளான சேர்வராயன், கொல்லிமலை மற்றும் கல்ராயன் மலைப்பகுதிகளில் சாகுபடி செய்ய ஏற்றது.

மண்ணை நன்றாக உழுது ஒரு எக்டருக்கு 20-25 டன் தொழு எரு இட்டுப் பண்படுத்த வேண்டும். மலைப்பகுதிகளில் சோலை மண் உள்ள இடங்களில் 10 டன் தொழு எரு இட்டால் போதுமானது. மலைப்பகுதிகளில் 2மீ து 2 மீ அளவிலான பாத்திகளில் செடிகளை நடவு செய்யலாம். சமவெளிப்

பகுதிகளில் ஒரு எக்டருக்கு 25 டன் தொழு எரு இட்டு மண்ணைப் பண்படுத்திய பிறகு மூன்று அடி இடைவெளியில் பார்களை அமைத்து அவற்றின் பக்கவாட்டில் செடிகளை நடலாம்.

திப்பிலியை ஓரிரு கணுக்களுடைய தண்டுகள் மூலம் பயிர்ப்பெருக்கம் செய்யலாம். கணுக்கள் எளிதாக வேர்பிடிக்கும் தன்மை உடையவை. திப்பிலிக் கொடிகளின் நுனி மற்றும் நடுப் பாகத்திலிருந்து ஓரிரு கணுக்களை உடைய தண்டுகளைப் பதித்தால் 60 நாட்களில் வேர்கள் முழுவதும் பிடித்துவிடும். வேர்பிடித்த தண்டுகளை நடவிற்கு பயன்படுத்தலாம்.


மலைப்பகுதிகளில் கோடைக்காலங்களில் வாரம் ஒருமுறை நீர்ப்பாசனம் செய்ய வேண்டும். சமவெளிப்பகுதிகளில் தோப்புகளில் வாய்க்கால் ஓரங்களில் செடிகளை நட்டும் பராமரிக்கலாம். தென்னையில் ஊடுபயிராக சாகுபடி செய்யும் போது வாரம் ஒருமுறை நீர்ப் பாசனம் அளிக்க வேண்டும்.

**நிழல் பராமரிப்பு:** திப்பிலி மருந்துச் செடிகளுக்கு 60 சதவீதம் நிழல் இருப்பது அவசியம். நிழல் தரும் மரங்களான சவுக்கு, கல்யாண முருங்கை போன்றவற்றை ஆண்டுக்கு ஒருமுறை பரவலாக உள்ள கிளைகளைக் களைதல் வேண்டும். சீரான வெளிச்சமும் அதே சமயம் பிற்பகல் நேரங்களில் ஓரளவு நிழலும் இருக்கின்ற வகையில் நிழல் மரங்களின் கிளைகளை வெட்டிவிட வேண்டும். சமவெளிப்பகுதியில் தென்னந்தோப்பு அல்லது பாக்குத் தோப்புகளில் திப்பிலி செடிகளுக்கு பிற்பகல் நேரங்களில் நிழல் இருக்கின்ற இடங்களைத் தேர்ந்தெடுத்து சாகுபடி செய்யலாம். அதிகளவு வெப்பம் இருந்தால் சாழிக் கன்றுகளை நட்டு செடிகளுக்கு நிழலை ஏற்படுத்தலாம்.

**மகசூல்**: முதல் ஆண்டில் 750 கிலோ உலர்ந்த காய்களும் இரண்டாவது ஆண்டிலிருந்து சராசரியாக 1500 கிலோ காய்களும் மகசூலாகக் கிடைக்கும். வேர்க ளுக்காக பயிர் செய்தால் எக்டரில் செடிகளை நட்ட இரண்டாவது ஆண்டில் 5 முதல் 7 டன் வேர்களும் மூன்றாவது ஆண்டில் 6 முதல் 8 டன் வேர்களும் உலர்ந்த அடிப்படையில் கிடைக்கும்.ஆர்.ஜி.ரீஹானா, அக்ரி கிளினிக்,தாராபுரம்-638 657,மொபைல்: 89037 57427.

**சின்னச்சின்ன செய்திகள்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 09,2011,00:00 IST





**சோயா பீன்ஸ் ஜே.எஸ்.95-60:** தமிழகத்தில் அறிமுகப் படுத்தப்பட்டுள்ள புதிய ரகம் இது. மத்தியப்பிரதேச மாநிலத்தில் ஜபல்பூர் விவசாய பல்கலைக் கழகத்திலிருந்து வெளியிடப்பட்டுள்ளது. சோயா ரகங்களான ஜேஎஸ்.335, 93-05, 97-52 ஆகியவை மிகவும் பிரபலமான ரகங்களாகும். இதில் ஜேஎஸ்.335 சோயாரகம் இப்போது மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரம், ராஜஸ்தான், ஆந்திரா, கர்நாடகம் மற்றும் தமிழகத்தின் பல பகுதிகளில் விவசாயிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டு அதிக பரப்பளவில் சாகுபடி செய்யப்படுகிறது. **ஜே.எஸ்.95-60ன் சிறப்பியல்புகள்**: வயது 75-85 நாட்கள். நல்ல முளைப்புத்திறன், வெடிக்காத காய்கள், 4 மணிகள் கொண்ட காய்கள் அதிகம். சாயாத தன்மை, வேர் அழுகல் நோய்க்கு எதிர்ப்புசக்தி, மண்ணில் அதிக ஈரப்பதம் மற்றும் வறட்சியைத் தாங்கி வளரக்கூடியது. மஞ்சள்தேமல் நோய்க்கு எதிர்ப்புசக்தி கொண்டது. மானாவாரியாக பயிர் செய்யும்போது மழையளவு குறைவாக உள்ள பகுதிகளிலும் மேட்டுப்பகுதியான நிலங்க ளிலும் சாகுபடி செய்ய ஏற்றது.

**மகசூல்**: ஏக்கருக்கு 1000 கிலோ முதல், 1400 கிலோ வரை. ஊடுபயிருக்கு மிகவும் ஏற்றது. குறிப்பாக கரும்பு, மஞ்சள், வாழை, பருத்தி, மரவள்ளி, தென்னை, எண்ணெய் பனை, மல்பெரி ஆகியவற்றுடன். தற்சமயம் ஈரோடு, சேலம் மாவட்டங்களில் சாகுபடி செய்யப்படுகிறது. மேலும் விபரங்களுக்கு: ம.சேவியர் பால்ராஜ், உதவி பொது மேலாளர், சக்தி சுகர்ஸ் லிமிடெட், சோயா பிரிவு, 180, பந்தய குதிரை சாலை, கோவை-641 018. மொபைல்: 94431 37338.

குமுள், குமிள், குமுளா - Gmelina arboreal குடும்பம் வெர்பனேசி. இம்மரம் வறட்சியையும், வெப்பத்தையும் தாங்கி வளரக்கூடியது. செம்பெறை முதல் சுண்ணாம்பு வரை பல்வேறு மண்ணிலும் வளரும். ஆழமான இரு மண்ணில் செழிப்பாக வளரும். ஈரச் செழிப்புள்ள பள்ளத்தாக்குகளில் MSL 1500 மீ. உயரம் வரை வளர்கிறது. ஆண்டு மழை 750 மி.மீ அவசியம். 10 ஆண்டுகள் வரை வேக வளர்ச்சி; தை, மாசியில் இலையுதிர்த்து சித்திரையில் புது இலைகள் உருவாகும்.

வாய்க்கால் கரைகள், கண்மாய்களுக்கு மிக உகந்தது. நேரடி விதைப்பு, நாற்று நடவு, போத்து நடவு, கிளை ஒட்டு முனை ஒட்டு மூலம் நடவு செய்யலாம். விறகுக்கு 2 மீ x 2 மீ இடைவெளி, மரத்துக்கு 3 மீ x 3மீ இடைவெளி. துரித வளர்ச்சி, பாசனமுள்ள இடங்களில் 12-15 ஆண்டுகளில் வெட்டலாம். தனி மரமானால் அகன்ற தழையமைப்புடன் வளரும். தோப்பானால் 2 அடி விட்டத்தில் 30மீ உயரம் வரை வளரும். வெட்டியபின் அக்கட்டை துளிர்க்கும். ஒப்படர்த்தி 0.42 கனமீட்டர், எடை 480 கிலோ.

நிறம் - பழுப்பு மஞ்சள்; நெருங்கிய ரேகைகள், மிருதுவானது, உழைக்கும். எளிதில் அறுத்து இழைக்கலாம். பாலிஷ் ஏறும். கனமில்லாத, அதே சமயத்தில் வலுவான சாமான்கள், மேஜை நாற்காலிகள், படகுகள், பலகைகள் செய்திட ஏற்றது. தீப்பெட்டி, தீக்குச்சி, பிளைவுட்டும் தயாரிக்கலாம். இலைகள் நல்ல கால்நடைத் தீவனம்.

**சூரியகாந்தியில் விதை கடினப்படுத்துதல்**: சூரியகாந்தி ஒரு குறுகியகாலப் பயிர். இப்பயிரை ஆண்டு முழுவதும் பயிரிடலாம். தண்ணீர் தேவை குறைவு. வறட்சியைத் தாங்கி வளரக்கூடியது. எல்லாவகை மண்ணுக்கும் ஏற்றது. எண்ணெய் வித்துப் பயிர்களில் மிகச்சிறந்த ஓர் பயிராகும். சூரியகாந்தி எண்ணெய் இருதய நோய்க்கு மிகவும் சிறந்தது. வார்னிஷ், பெயின்ட் மற்றும் சோப்பு தயாரிக்க பயன்படுகிறது. சூரியகாந்தி புண்ணாக்கில் புரதச்சத்து அதிகமாக இருப்பதால், கால்நடைகள் மற்றும் கோழிகளுக்கு தீவனமாகப் பயன்படுத்தலாம். இதை ஊடுபயிராகவும் கலப்பு பயிராகவும் சாகுபடி செய்யலாம். இத்தகைய நன்மைகள் நிறைந்த சூரியகாந்திப் பயிரில் மகசூல் இழப்பைத் தவிர்க்க விதையைக் கடினப் படுத்தி பயன்படுத்தலாம் என விநாயகபுரம் நீர்

மேலாண்மை பயிற்சி நிலைய வேளாண்மை துணை இயக்குனர் (பொ) ப.ராமநாதன் தெரிவிக்கிறார்.

சூரியகாந்தி விதைகளைக் கடினப்படுத்துவதற்கு 2% துத்தநாக சல்பேட் கரைசலில் (ஒரு லிட்டர் சுத்தமான குடிநீரில் 20 கிராம் துத்தநாக சல்பேட்) 12 மணி நேரம் ஊறவைத்து அதன்பிறகு விதைத்தால் முளைப்புத்திறன் அதிகரிப்பதோடு வறட்சியைத் தாங்கும் சக்தியும் அதிகரிக்கிறது. ஒரு கிலோ விதைக்கு ஒரு லிட்டர் கரைசல் தேவைப்படும்.-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.

**மழை நீர் சேமிப்பு பற்றி வேளாண் துறை யோசனை**

பதிவு செய்த நாள் : நவம்பர் 09,2011,03:14 IST

நாமக்கல்: "மழைநீர் சேமிப்பதன் மூலம், நிலத்தடி நீரை பெருக்க இயலும்' என, நாமக்கல் வேளாண் நிலைய துணை இயக்குனர் நடராஜன் தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்ட அறிக்கை:மழைநீர் சேகரிப்பு திட்டத்தை மக்கள், சமூக தொண்டு நிறுவனமும் முழுமையாகவும், முறையாகவும் செயல்படுத்துவதன் மூலம் மழைநீரை சேமித்து, நிலத்தடி நிர்வாகத்தை பெருக்க இயலும். இத்திட்டத்தை செயல்படுத்த கோடை உழவு செய்தல், சரிவுக்கு குறுக்கு உழவு செய்தல், ஆழ்சால் அகலப்பாத்தி அமைத்தல், மூன்று ஆண்டுக்கு ஒரு முறை சட்டி கலப்பை உளிக்கலப்பை கொண்டு உழவு செய்தல் போன்றவற்றை மேற்கொள்ள வேண்டும்.அதே போல், சரிவுக்கு குறுக்கே சம உயர வாரப்புகள் அமைத்தல், விவசாய நிலத்தில் தாழ்வான பகுதிகளில் பண்ணைக் குட்டைகள் அமைத்து மழைநீரை சேமித்தல், பயனற்ற மற்றும் பொய்த்துப்போன கிணறுகளில் அதிகப்படியான மழைநீரை சேமித்தல், வடிகட்டும் தொட்டி அமைத்து, குழாய் கிணறுகளிலும், திறந்தவெளிக் கிணறுகளிலும் மழைநீரை சேமித்தல் போன்றவற்றை பின்பற்ற வேண்டும்.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது

**நெற்பயிரில் கூடுதல் மகசூலுக்கு வேளாண் அதிகாரி ஆலோசனை**

பதிவு செய்த நாள் : நவம்பர் 09,2011,03:14 IST

நாமக்கல்: "நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகள், தொழில் நுட்பத்தை பயன்படுத்தி நெற்பயிரில் அதிக மகசூல் பெறலாம்' என, நாமக்கல் வேளாண் உதவி இயக்குனர் செல்வி தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:நாமக்கல் வட்டார நெல் சாகுபடியாளர்கள்,

நெல் பயிருக்கு ஜிங்க்சல்பேட் பற்றாக்குறை ஏற்பட்டால், சோகை வெளிறிய மஞ்சள் நிறமடைந்து வளர்ச்சி குன்றி வட்ட வட்டமாக பச்சைக் கட்டாமல் நின்றுவிடும்.

மண்ணில் உள்ள ஜிங்க் சத்து, நீர் தேங்கி நிற்கும் வயலில் பயிருக்கு எளிதாக கிடைக்காது.அதனால், நெற்பயிர் மஞ்சள் நிறமடைந்து வளர்ச்சி குன்றி காணப்படும். இக்குறைபாட்டை நிவர்த்தி செய்ய, நெல் நடவுக்கு முன், நடவு வயலை சமன் செய்த பின் பத்து கிலோ ஜிங்க் சல்பேட் உரம் (ஒரு ஏக்கருக்கு) மற்றும் பத்து கிலோ மணலுடன் கலந்து சீராக தூவி மண் நடவு செய்ய வேண்டும்.நெல் நடவு செய்த வயல்களில், ஆங்காங்கே பயிர் தழைக்காமல் மஞ்சள் நிறமாக தென்பட்டால், தண்ணீர் அளவை நெல் வயலில் குறைத்து, மண் சற்று இறுகிய பின் ஜிங்க்சல்பேட், பத்து கிலோவை மணலுடன் கலந்து இட்டு தண்ணீர் கட்டினால் பயிர் நன்கு தழைக்கும். நாமக்கல் வட்டார விவசாயிகள் மேற்கண்ட தொழில் நுட்பத்தை கடைபிடித்து, நெல்லில் அதிக விளைச்சல் பெறலாம்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது

**இயற்கை முறை தொழில்நுட்பத்தை விவசாயிகள் பயன்படுத்த "அட்வைஸ்'**

பதிவு செய்த நாள் : நவம்பர் 09,2011,03:24 IST

கருத்தை பதிவு செய்ய

திருத்துறைப்பூண்டி: ""தாளடி நடவு பயிர் மழையால் பாதிக்கப்படாமல் இருக்க இயற்கை முறை தொழில்நுட்பத்தை விவசாயிகள் பயன்படுத்த வேண்டும்,'' என ஆதிரெங்கம் இயற்கை வேளாண் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தின் இயக்குனர் ஜெயராமன் தெரிவித்துள்ளார்.இது குறித்து அவர் கூறியதாவது:திருத்துறைப்பூண்டி தாலுகாவில் 20 ஆயிரம் ஏக்கரில் குறுவை சாகுபடி செய்யப்பட்டு அறுவடை முடிந்து தற்போது தாளடி சாகுபடி பணிகள் துவங்கி நடந்து வருகிறது. கடந்த மாதம் 25ம் தேதி முதல் வடகிழக்கு பருவ மழை துவங்கி பெய்து வருகிறது. தாளடி நடவு செய்து வரும் விவசாயிகள் ஒரு ஏக்கருக்கான நாற்றுக்கு ஐந்து லிட்டர் பஞ்சகவ்யா, ஒரு கிலோ சூடோமோனாஸ் 100 லிட்டர் தண்ணீரில் கலக்க வேண்டும்.இதை ஒரு நாள் இரவு முழுவதும் வைத்திருந்து நாற்றின் வேர் பகுதியை இந்த பஞ்சகவ்யா கலவையில் நனைத்து நடவு செய்ய வேண்டும். அப்போது வேர் அழுகல் நோய், அஸ்வினி தாக்குதல் போன்ற நோய்களுக்கு எதிர்ப்பு தியாகவும், கனமழையில் குறிப்பட்ட நாட்கள் வரை அழுகாமல் பயிர்களை பாதுகாக்க முடியும். மேலும் தாளடி நாற்றில் தொடர் மழை காரணமாக பூச்சி தாக்குதல் அதிகம் காணப்படுகிறது.தற்கு காலை பணி பதத்தில் நாற்று முழுவதும் நன்கு படும் வகையில் வசம்பு தூளை தெளிக்க வேண்டும். வசம்பு தூள் வேளாண்மை விரிவாக்க மையங்களில் மானிய விலையில் கிடைக்கிறது. மேலும் பஞ்சகவ்யா செயல் விளக்கத்துக்காக ஆதிரெங்கம் இயற்கை விவசாய பண்ணையில் ஒரு லிட்டர்

பஞ்சகவ்யா இலவசமாக பெற்று கொள்ளலாம்.மேலும் தகவலுக்கு 9443320954 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு பயன்பெறலாம் என்று ஜெயராமன் தெரிவித்துள்ளார்.

**விவசாயிகள் சங்க பேரவை கூட்டம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 09,2011,02:58 IST

கருத்தை பதிவு செய்ய

தர்மபுரி: தர்மபுரியில் தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட பேரவை கூட்டம் நடந்தது.கவுரவ தலைவர் சின்னசாமி தலைமை வகித்தார். மாநில பொது செயலாளர் துரை மாணிக்கம், இ.கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் இளம்பரிதி, விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் ஆறுமுகம், மாவட்ட விவசாயிகள் சங்க நிர்வாகிகள் விஸ்வநாதன், கந்தசாமி, மாணிக்கம், சொக்கலிங்கம், முருகேசன், ராமநாதன் ஆகியோர் பேசினர்.மாநில செயலாளர் துரை மாணிக்கம் பேசியதாவது:இந்திய நாட்டின் முதுகெலும்பு என வர்ணிக்கப்படும் விவசாயம் கடும் நெருக்கடிக்கு ஆட்பட்டுள்ளது. விவசாயிகளின் தற்கொலைகள் தொடர்கின்றன. விவசாயிகள் இன்னமும் லாப விலை கேட்கம் நிலை தொடர்கின்றன. கட்டுப்படியான விலையை தான் கேட்டு வருகின்றனர். உரம், பூச்சி கொல்லி மருந்துகளின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. விவசாயிகளுக்கு விவசாயத்தின் மீது ஆர்வம் குறைந்து வருகிறது.தமிழகத்தில் சாகுபடி பரப்பு 25 சதவீதம் குறைந்துள்ளது. சாகுபடி நிலம் வேறு பயன்பாட்டுக்கு செல்வதை தடுத்து நிறுத்திட வேண்டும். பெட்ரோல் விலை, உர விலை உயர்வுக்கும் அந்தந்த நிறுவனங்கள் தான் காரணம். இவ்வாறு பேசினார்

**இயற்கை முறை தொழில்நுட்பத்தை விவசாயிகள் பயன்படுத்த "அட்வைஸ்'**

பதிவு செய்த நாள் : நவம்பர் 09,2011,03:24 IST

கருத்தை பதிவு செய்ய

திருத்துறைப்பூண்டி: ""தாளடி நடவு பயிர் மழையால் பாதிக்கப்படாமல் இருக்க இயற்கை முறை தொழில்நுட்பத்தை விவசாயிகள் பயன்படுத்த வேண்டும்,'' என ஆதிரெங்கம் இயற்கை வேளாண் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தின் இயக்குனர் ஜெயராமன் தெரிவித்துள்ளார்.இது குறித்து அவர் கூறியதாவது:திருத்துறைப்பூண்டி தாலுகாவில் 20 ஆயிரம் ஏக்கரில் குறுவை சாகுபடி செய்யப்பட்டு அறுவடை முடிந்து தற்போது தாளடி சாகுபடி பணிகள் துவங்கி நடந்து வருகிறது. கடந்த மாதம் 25ம் தேதி முதல் வடகிழக்கு பருவ மழை துவங்கி பெய்து வருகிறது. தாளடி நடவு

செய்து வரும் விவசாயிகள் ஒரு ஏக்கருக்கான நாற்றுக்கு ஐந்து லிட்டர் பஞ்சகவ்யா, ஒரு கிலோ சூடோமோனாஸ் 100 லிட்டர் தண்ணீரில் கலக்க வேண்டும்.இதை ஒரு நாள் இரவு முழுவதும் வைத்திருந்து நாற்றின் வேர் பகுதியை இந்த பஞ்சகவ்யா கலவையில் நனைத்து நடவு செய்ய வேண்டும். அப்போது வேர் அழுகல் நோய், அஸ்வினி தாக்குதல் போன்ற நோய்களுக்கு எதிர்ப்பு தியாகவும், கனமழையில் குறிப்பட்ட நாட்கள் வரை அழுகாமல் பயிர்களை பாதுகாக்க முடியும். மேலும் தாளடி நாற்றில் தொடர் மழை காரணமாக பூச்சி தாக்குதல் அதிகம் காணப்படுகிறது.தற்கு காலை பணி பதத்தில் நாற்று முழுவதும் நன்கு படும் வகையில் வசம்பு தூளை தெளிக்க வேண்டும். வசம்பு தூள் வேளாண்மை விரிவாக்க மையங்களில் மானிய விலையில் கிடைக்கிறது. மேலும் பஞ்சகவ்யா செயல் விளக்கத்துக்காக ஆதிரெங்கம் இயற்கை விவசாய பண்ணையில் ஒரு லிட்டர் பஞ்சகவ்யா இலவசமாக பெற்று கொள்ளலாம்.மேலும் தகவலுக்கு 9443320954 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு பயன்பெறலாம் என்று ஜெயராமன் தெரிவித்துள்ளார்.

**பருவமழை முன் எச்சரிக்கை பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 09,2011,02:54 IST

கருத்தை பதிவு செய்ய

தர்மபுரி : வடகிழக்கு பருவமழை பாதிப்பை தடுக்கும் வகையில் தர்மபுரி மாவட்டத்தில் உள்ள அனைத்து அணைகள் மற்றும் ஏரிகளில் பாதுகாப்பு நடவடிக்கைகளை பொதுப்பணித் துறை தீவிரப்படுத்தியுள்ளனர்.தர்மபுரி மாவட்டத்தில் பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டின் கீழ் உள்ள 73 ஏரிகள் மற்றும் பஞ்சாயத்து நிர்வாகத்தின் கீழ் உள்ள 634 ஏரிகளில் நீர் மட்டம் உயர்ந்துவருகிறது. இதைதவிர, மாவட்டத்திலுள்ள எட்டு அணைகளில் நீர் மட்டம் அதிகரித்துவருகிறது. இதையடுத்து, கலெக்டர் தலைமையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை நடத்தப்பட்டு, பொதுப்பணித்துறை, வருவாய்த்துறை மற்றும் தீயணைப்புத் துறையினர் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து ஆலோசனை வழங்கப்பட்டது.தற்போது, பெய்துவரும் பருவமழையால், வாணியாறு அணையில் 57.73 கனஅடியும், சின்னாறு அணையில் 39.34 கன அடி, தொப்பையாறு அணையில் 33.77 கனஅடி, நாகாவதி அணை 17.88 கன அடி, கேசர்குளி அணையில் 15.1 கன அடியாக உயர்ந்துவருகிறது. நீர்மட்டம் கடந்த வாரத்தைவிட 10 முதல் 25 கன அடி உயர்ந்துவருகிறது.பருவமழை இரு மாதங்கள் நீடிக்கும் என்பதால், அணையின் நீர்மட்டம் மேலும் உயரவாய்ப்புள்ளது. இதனால், பொதுப்பணித்துறையினர் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துவருகின்றனர். ஒவ்வொரு அணைகளிலும் முன்னெச்சரிக்கையாக 3 ஆயிரம் முதல் 4 ஆயிரம் மணல் மூட்டைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. ஆயிரக்கணக்கான மூங்கில் மரங்கள், நீர் மட்டத்தை இரவு நேரங்களில் கண்காணிக்கவும்,

அணையின் பாதுகாப்புக்காகவும் நவீன டார்ச் லைட்டுகள் ஆகிய பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

**வேளாண்மை கணக்கெடுப்பு பணி துவக்கம் : துல்லியமாக செயல்பட அறிவுரை**

பதிவு செய்த நாள் : நவம்பர் 08,2011,22:13 IST

கருத்தை பதிவு செய்ய

பொள்ளாச்சி : பொள்ளாச்சி தாலுகாவில் வேளாண்மை கணக்கெடுப்பு பணியில் ஈடுபடும் கிராம நிர்வாக அலுவலர்கள், வருவாய் ஆய்வாளர்கள், மண்டல துணை தாசில்தார்களுக்கான பயிற்சி வகுப்பு நேற்று நடந்தது. சப்-கலெக்டர் அருண்சுந்தர் தயாளன் துவக்கி வைத்து பேசுகையில், ""வருவாய்த்துறை அதிகாரிகளை கொண்டு வேளாண்மை கணக்கெடுப்பு நடக்கவுள்ளது. தேசிய அளவில் நடக்கும் கணக்கெடுப்பு புள்ளி விபரங்களை கொண்டு, சிறு, குறு விவசாயிகள், பெரிய விவசாயிகள், சாகுபடி பரப்பு, சாகுபடி பயிர்கள் விபரம் தெரியவரும். அதனால், கணக்கெடுப்பாளர்கள் உண்மையான புள்ளி விபரங்களை சேகரித்து பதிவு செய்ய வேண்டும்," என்றார். பொள்ளாச்சி தாசில்தார் சின்னப்பையன் முன்னிலை வகித்து பேசுகையில், ""வேளாண்மை கணக்கெடுப்பு பணி, உணவு உற்பத்தி மற்றும் வேளாண் திட்டங்களை வகுப்பதற்காக பயன்படுகிறது. டிச., 15ம் தேதி வரை பணி நடக்கிறது. கணக்கெடுப்பு முடிந்ததும், புள்ளி விபரங்களை மாவட்டம் வாரியாக அரசுக்கு ஒப்படைக்க வேண்டும். அதனால், குறித்த காலத்துக்குள் கணக்கெடுப்பை நிறைவு செய்ய வேண்டும்," என்றார்.

ஓய்வு பெற்ற புள்ளியியல் அலுவலர் கோவிந்தராஜ் பேசியதாவது: தேசிய அளவில் 9வது வேளாண்மை கணக்கெடுப்பு பணி தற்போது துவங்கியுள்ளது. ஒவ்வொரு ஐந்தாண்டுக்கும் ஒருமுறை இந்த கணக்கெடுப்பு பணி நடப்பது வழக்கம். கடந்த கணக்கெடுப்பின் போது தயாரிக்கப்பட்ட புள்ளி விபரங்கள், கணக்கெடுப்பாளர்களிடம் வழங்கப்பட்டுள்ளது. தற்போது அந்த விவசாய நிலங்கள் என்னவாக உள்ளது. பயிர் சாகுபடி செய்த விவசாயிகள், தற்போது என்ன சாகுபடி செய்கிறார்கள்; தென்னை உட்பட நீண்ட கால பயிர்கள் சாகுபடி பரப்பு அதிகரித்துள்ளதா, குறைந்துள்ளதா; தென்னை சாகுபடி பரப்பு குறைந்திருந்தால், அந்த நிலங்கள் என்னவாக மாறியிருக்கிறது; கிராமத்தின் பரப்பில் மொத்தமுள்ள விவசாயப் பரப்பு எவ்வளவு; அரை எக்டேர் முதல் ஒவ்வொரு எக்டேர் அளவிலும் நிலம் வைத்திருக்கும் விவசாயிகள் குறித்து, புள்ளி விபரங்கள் சேகரிக்க வேண்டும். அந்த நிலத்தில் செய்யப்பட்டுள்ள சாகுபடி நிலை, கிணறு, ஆழ்குழாய் கிணறு, மின் இணைப்பு போன்றவற்றை பதிவு செய்ய வேண்டும். விவசாயிகள்

நிலத்தை குத்தகைக்கு விட்டிருந்தால், குத்தகைதாரர் பெயர், குத்தகை காலத்தை பதிவு செய்ய வேண்டும். தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்கள் வசமுள்ள விவசாய நிலத்தை தனியாக வகைப்படுத்த வேண்டும். இந்த விபரங்கள் படி, கணக்கெடுப்பு பணி முடித்ததும், தாலுகா அதிகாரிகளிடம் ஒப்படைக்க வேண்டும். மாவட்ட அளவில் புள்ளி விபரங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு, அரசுக்கு அனுப்பப்படும். அதன்பின், மாநில அளவில் புள்ளி விபரங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு, தேசிய அளவில் கணக்கிட மத்திய அரசுக்கு அனுப்பப்படும். இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து கணக்கெடுப்பு பணியில் தெளிவாக ஈடுபட வேண்டும்.இவ்வாறு, கோவிந்தராஜ் பேசினார்.

**பூச்சிகளை கட்டுப்படுத்த புதிய உபகரண பெட்டி : வேளாண் பல்கலை அறிமுகம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 08,2011,22:12 IST

கருத்தை பதிவு செய்ய

கோவை : தமிழ்நாடு வேளாண் பல்கலை பூச்சியியல்துறை சார்பில் விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் நலனுக்காக தானிய சேமிப்பில் ஏற்படும் பூச்சிகளை கட்டுப்படுத்த, "புதிய உபகரணப்பெட்டி' அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. பல்கலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள புதிய பூச்சி கட்டுப்பாட்டு உபகரணப்பெட்டியில், எட்டு விதமான கருவிகள் உள்ளன. தானிய சேமிப்பில் பூச்சி முட்டைகளை அழிக்கும் கருவி, குழாய் வடிவப்பொறி, கூம்பு வடிவப்பொறி, பயறு வண்டுகளை பிடித்தழிக்கும் பொறி, கிண்ண வடிவப்பொறி, பூச்சிகளை தானாகவே அகற்றும் சேமிப்பு கலன், புறஊதாக்கதிர் விளக்கு பொறி, சேமிப்புக்கிடங்கில் பூச்சி கண்டறியும் கருவி ஆகியவை உள்ளன. ஒவ்வொரு உபகரணமும் அதன் அமைப்புக்கேற்ப பூச்சிகளை கட்டுப்படுத்துகின்றன. தானியங்கள் சேமிக்கப்படும்போது ஆரம்ப காலத்தில் மிக குறைந்த அளவில் பூச்சிகள் காணப்படுகின்றன. நாட்கள் செல்ல செல்ல பூச்சிகள் எண்ணிக்கை அதிகரிக்கின்றன. காலை மற்றும் மாலை நேரங்களில் பூச்சிகள் காற்றோட்டம் அதிகமுள்ள இடங்களில் சுற்றித்திரியும். இந்நேரங்களில் பூச்சிகள் உண்ணுவதற்கு தானியங்கள் இருந்தபோதிலும், தானியங்களை விட்டு வெளியில் வரும்.

பூச்சிகளின் இந்த பண்பை பயன்படுத்தி, ஆரம்ப நாட்களில் தானியங்களில் இருந்து பூச்சிகளை வெளியேற்ற வேண்டும். பூச்சிகளை எளிதில் வெளியேற்றும் வகையில் "புதிய உபகரணப் பெட்டி' வடிவமைக்கப்பட்டுள்ளது. "புதிய உபகரணப்பெட்டி' கண்டுபிடிப்பாளர் பேராசிரியர் மோகன் கூறியதாவது: ஐந்து முதல் 10 நிமிடங்களில் பத்து கிலோவிக்கு மேற்பட்ட தானியங்களில் இருக்கும் பூச்சிகளை அகற்றி, தனியாக சேகரிக்கும் வசதியும் உள்ளன. இந்த உபகரணங்களை தேவைப்கேற்ப மின்மோட்டார் பொருத்தியும் பயன்படுத்தலாம். அடுத்த ஆண்டில் இன்னும் புதிய

கண்டுபிடிப்பு கருவிகளுடன் கூடிய புதிய உபகரண பெட்டி வெளியிடப்படும். பெட்டியுடன் பயன்பாடு பற்றி அறிய குறுந்தகடு இணைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு, அவர் கூறினார்.

**வேளாண்மை மாணவிகளின் ஊரக பணி அனுபத் திட்டம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 08,2011,22:57 IST

கடலூர் : சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண்புல மாணவர்கள் சாக்காங்குடி கிராமத்தில் வீட்டுத் தோட்டம் அமைத்து காய்கறி சாகுபடி குறித்த விளக்கக் கூட்டம் நடந்தது. சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண்புல இறுதியாண்டு மாணவிகளின் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டம் நடந்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக சிதம்பரத்தை அடுத்த சாக்காங்குடி கிராமத்தில் வீட்டுத் தோட்டம் அமைத்து காய்கறி சாகுபடி பற்றிய விளக்கக் கூட்டம் நடந்தது. கீரப்பாளையம் உதவி தோட்டக்கலைத் துறை இயக்குனர் ராஜேந்திரன் தலைமை தாங்கினார். மாணவி சுஜி வரவேற்றார். அண்ணாமலைப் பல்கலைக் கழக தோட்டக்கலைத் துறை உதவி பேராசிரியர் சுரேஷ்குமார் சிறப்புரையாற்றினார். பல்கலைக்கழக முதுநிலை ஆராய்ச்சியாளர்கள் டாக்டர் சுதாகர், பச்சையப்பன், ஊராட்சித் தலைவர் ரமேஷ் ஆகியோர் பேசினர். நிகழ்ச்சியில் தரச்சான்று பெற்ற காய்கறி விதைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. வேளாண்புல மாணவி வனிதா நன்றி கூறினார்.

**மரவள்ளிக்கு உரிய விலை கிடைக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா; விவசாயிகள் எதிர்பார்ப்பு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 08,2011,22:57 IST

சிறுபாக்கம் : மங்களூர், நல்லூர் ஒன்றியங்களில் மரவள்ளிக்கு உரிய விலை கிடைக்காததால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். நல்லூர் மற்றும் மங்களூர் ஒன்றிய கிராமப்புறங்கள் விவசாயமே பிரதான தொழிலாக உள்ளன. கடந்த சில ஆண்டுகளாகவே கூலியாட்கள் தட்டுப்பாடு, உரம் விலை உயர்வு, உரம் தட்டுப்பாடு, மின் வினியோகத்தடை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் மஞ்சள், நெல், கரும்பு பயிரிட்ட விவசாயிகள் ஒரு வருடப்பயிரான குங்குமரோஸ், வெள்ளை ரோஸ், பர்மா உள்ளிட்ட ரக மரவள்ளி கிழங்கு பயிரினை 100க்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த சிறு மற்றும் குறு விவசாயிகள் பயிரிடுகின்றனர். தற்போது அறுவடை தொடங்கி அடுத்த ஆண்டு ஜனவரி வரை ரகவாரியாக அறுவடை நடைபெறும். கடந்த

காலங்களில் ஒரு மூட்டை 500 முதல் 600 ரூபாய் வரை விலை போன கிழங்குகள் தற்போது பெய்து வரும் மழையை காரணம் காட்டி தொடக்க நிலையிலேயே ஒரு மூட்டை கிழங்கு விலை 150 முதல் 170 ரூபாய் வரை மட்டுமே புரோக்கர்கள் மூலம் கிழங்கு அரவை மில் முதலாளிகள் கொள்முதல் செய்து வருகின்றனர். மற்ற பயிர்களைப் போல் அறுவடை செய்து கிடங்குகளில் இருப்பு வைத்து விற்க முடியாத நிலையாலும், தொடர்ந்து நான்கு தினங்கள் மழை பெய்தால் நிலத்திலேயே கிழங்கு அழுகி விடும் என்ற காரணத்தால் வேறு வழியின்றி கிழங்கு ஆலை முதலாளிகளுக்கு புரோக்கர்கள் கேட்கும் விலைக்கு விற்க வேண்டிய அவல நிலையும் நிர்ப்பந்தமும் ஏற்பட்டுள்ளதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். பயிரிட்ட விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைத்திட அரசு தோட்டக்கலை வேளாண் அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

**வேளாண் சந்தைப்படுத்துதல் விவசாயிகளுக்கு பயிற்சி**

பதிவு செய்த நாள் : நவம்பர் 08,2011,22:51 IST

விருத்தாசலம் : விருத்தாசலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைகழகம் சார்பில் வேளாண் சந்தைப்படுத்துதல் குறித்து ஒரு நாள் விழிப்புணர்வு பயிற்சி நடந்தது. வேளாண்மை அறிவியல் நிலைய இணை பேராசிரியர் சுப்ரமணியன் தலைமை தாங்கினார். வேளாண் விற்பனை துறை அலுவலர்கள் அமுதா, நந்தினி முன்னிலை வகித்தனர். ஜெய்ப்பூர் தேசிய வேளாண் விற்பனை நிறுவன அலுவலர் ரங்கசாமி மத்திய வேளாண்மைத் துறை அமைச்சகத்தால் செயல்படுத்தப்படும் வேளாண் சந்தைப்படுத்துதல் திட்டங்களையும், மத்திய சேமிப்பு கிடங்கு மேலாளர் அண்ணா துரை மத்திய சேமிப்பு கிடங்கு, வேளாண் பொருட்கள் சேமிப்பு மற்றும் நவீன சேமிப்பு கிடங்கு பற்றி விளக்கினார். மேலும், வேளாண் விற்பனை துறை செயல்பாடுகள் மற்றும் திட்டங்கள், உழவர் சந்தை செயல்பாடுகள் பற்றி விளக்கப்பட்டது. வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானி கண்ணன் அறுவடைக்கு பின் வேளாண் பொருட்கள் பதப்படுத்துதல் பற்றிய தொழில் நுட்ப கருத்துகளை எடுத்துரைத்தார். விஞ்ஞானி ராஜி நன்றி கூறினார்.

**மழையிலிருந்து பயிர்களை காக்கும் முறைகள் : வேளாண் அதிகாரி ஆலோசனை**

பதிவு செய்த நாள் : நவம்பர் 08,2011,22:51 IST

விழுப்புரம் : மழையிலிருந்து பயிர்களை பாதுகாக்கும் முறைகள் குறித்து தோட்டக்கலை துறை மூலம் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. பருவமழை தொடர்ந்து பெய்து வருவதால் விவசாயிகள் சாகுபடி செய்துள்ள வாழை, காய்கறிகள் மற்றும் பூச்செடிகள் பாதிப் படைந்து வருகின்றன. இதிலிருந்து பயிர்களை பாதுகாக்கும் முறைகள் குறித்து தோட்டக்கலை துணை இயக்குனர் பன்னீர் செல்வம் கூறும் ஆலோ சனைகள் வருமாறு: வாழை, காய்கறிகள் மற்றும் பூச்செடித் தோட்டங்களில் உள்ள தேங்கி நிற்கும் மழை நீரை வடிகால் வசதி செய்து வெளியேற்ற வேண்டும். தோட்டத்தில் மேல் மண் உலர்ந்த பின் காற்றோட்டம் ஏற்பட மண்வெட்டிகள் மூலம் நன்கு கொத்திவிட வேண்டும்.

வாய்ப்புள்ள இடங்களில் சிறு குச்சிகள் அல்லது கொம்புகள் கொண்டு செடி மற்றும் கொடிகள் தரையில் சாயாதவாறு கட்டி விடலாம் அல்லது முட்டுக் கொடுக்கலாம். அதேபோல் வாழை மரங்களுக்கு காற்றினால் ஏற்படும் சேதத்தை தவிர்க்க சவுக்கு கொம்புகள் கொண்டு முட்டுக் கொடுக்கலாம். மழையினால் ஏற்படும் சத்து குறை பாட்டை போக்க யூரியா கரைசல் உள்ளிட்ட பூச்சிக்கொல்லி மருந்துகளையும் தெளித்து தோட்டக்கலைப் பயிர்களை காப்பாற்றலாம்.

**கடன் பெறா விவசாயிகள் காப்புறுதி செய்ய 15ம் தேதி கடைசி நாள்: வேளாண் இணை இயக்குனர் தகவல்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 08,2011,22:57 IST

கடலூர் : மாற்றியமைக்கப்பட்ட தேசிய வேளாண்மை பயிர் காப்புறுதித் திட்டத்தில் கடன் பெறா விவசாயிகள் காப்புறுதி செய்ய வரும் 15ம் தேதி கடைசி நாள் என கடலூர் வேளாண்மை இணை இயக்குனர் இளங்கோவன் தெரிவித்துள்ளார். அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பு: நடப்பு சம்பா பருவத்தில் சாகுபடி செய்யப்பட்ட பயிரை விவசாயிகள் மாற்றியமைக்கப்பட்ட தேசிய வேளாண்மை பயிர் காப்புறுதி திட்டத்தில் பயிர் கடன் பெறும் மற்றும் கடன் பெறாத விவசாயிகள் சேர்ந்து பயன் பெறலாம். இயற்கை சீற்றங்கள் புயல், வெள்ளத்திலிருந்து பாதுகாப்பு பெற பயிர் காப்பீடு செய்வது மூலம் மகசூல் இழப்பு 50 சதவீதத்திற்கு மேல் ஏற்படும்போது காப்புறுதித் தொகை வழங்கப்படும். மாற்றியமைக்கப்பட்ட தேசிய வேளாண்மை பயிர் காப்புறுதித் திட்டத்தில் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் கடன் பெறும் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு காப்பீட்டுத் தொகை 12 ஆயிரம் ரூபாய். காப்பீடு முழு பிரீமியம்

1,428 ரூபாய். இதில் அரசு மானியம் 828 ரூபாய் போக, விவசாயிகள் மீதி 600 ரூபாய் செலுத்த வேண்டும். அதேப்போன்று தேசிய மயமாக்கப்பட்ட வங்கியிலோ அல்லது தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியிலோ கடன் பெறாத விவசாயிகள் இத்திட்டத்தில் சேர்ந்து பயன்பெற வங்கிகளில் நேரடியாக பிரிமியங்களை செலுத்த வேண்டும். கடன் பெறாத விவசாயிகள் காப்பீட்டுத் தொகை 7,132 ரூபாய்க்கு, முழுபிரிமியம் 849 ரூபாயில் அரசு மானியமாக 492 ரூபாய் வழங்குகிறது. மீதம் 357 ரூபாய் விவசாயிகள் செலுத்த வேண்டும். கடன்பெறா விவசாயிகளின் காப்புறுதி செய்ய கடைசி நாள் வரும் 15ம் தேதியாகும். மேலும் விவரங்களுக்கு வட்டார வேளாண் உதவி இயக்குனர் அலுவலகத்தை அனுகவும். இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**மழை நின்றதால் தண்ணீர் வடிகிறது நெல் பயிரிட்ட விவசாயிகள் நிம்மதி**

பதிவு செய்த நாள் : நவம்பர் 08,2011,22:57 IST

கடலூர் : மழை விட்டு தற்போது தண்ணீர் வடியத் துவங்கியுள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கடலூர் மாவட்டத்தில் கடந்த 15 நாட்களில் பெய்த மொத்த மழை அளவு மி.மீ., விவரம்: கடலூர் 660.9, சிதம்பரம் 467, பரங்கிப்பேட்டை 466, காட்டுமன்னார்கோவில் 320.90, தொழுதூர் 374.8, ஸ்ரீமுஷ்ணம் 353, விருத்தாசலம் 397.80, பண்ருட்டி 93.4, கொத்தவாச்சேரி 457.5, கீழ்செருவாய் 316.2, அண்ணாமலை நகர் 469.5, சேத்தியாத்தோப்பு 326, புவனகிரி 403, லால்பேட்டை 340, மே.மாத்தூர் 260, காட்டுமயிலூர் 262, வேப்பூர் 276, குப்பநத்தம் 452.20, லக்கூர் 259.80, பெலாந்துறை 411.4 மி.மீ., மழை பெய்துள்ளது. கடந்த 16 நாட்களில் சராசரியாக 368.31 மி.மீ., மழை பதிவானது. தொடர் மழை காரணமாக மாவட்டத்தில் பொதுப்பணித் துறை பராமரிப்பில் உள்ள 215 ஏரிகளில் 70 ஏரிகள் முழுமையாகவும், 51 ஏரிகள் 75 சதவீதமும், 43 ஏரிகள் 50 சதவீத அளவிற்கு நிரம்பியது. அதேபோன்று மாவட்டத்தின் பிரதான நீர் நிலையான வீராணம் 47.5 அடிக்கு 42.80 அடியும், வெலிங்டன் ஏரி 27.4 அடிக்கு 22.20 அடியாக நீர் மட்டம் உயர்ந்தது. பிற நீர் நிலைகளும் வேகமாக நிரம்பியது. மேலும், நீர் வரத்து அதிகரித்ததால் நீர் நிலைகளில் இருந்து தண்ணீர் வெளியேற்றப்பட்டது.

இதன் காரணமாக மாவட்டத்தின் பெரும் பகுதி விளை நிலங்கள் தண்ணீரில் மூழ்கியதால் விவசாயிகள் சோகத்தில் ஆழ்ந்தனர். இந்நிலையில் கடந்த 6ம் தேதி மழையின் தீவிரம் குறைந்து நேற்று முன்தினம் காலை முதல் வெயில் காய்ந்து வருவதால், நீர் நிலைகளில் இருந்து தண்ணீர் வெளியேற்றுவது கணிசமாக குறைக்கப்பட்டுள்ளது. நிலங்களில் சூழ்ந்திருந்த தண்ணீர் வடிந்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இருப்பினும் அறுவடைக்கு தயார் நிலையில் இருந்த 32.5 ஏக்கர் மரவள்ளிக் கிழங்கு, 5 ஏக்கர் மணிலா, 75 ஏக்கர் நெல், 50 ஏக்கர்

கோழிக்கொண்டை பூந்தோட்டம் முழுமையாக அழுகி சேதமடைந்தன. 427.5 ஏக்கர் நெல் வயலில் சூழ்ந்திருந்த தண்ணீர் வடிந்து வருகிறது.

**வேளாண் சந்தைப்படுத்துதல் விவசாயிகளுக்கு பயிற்சி**

பதிவு செய்த நாள் : நவம்பர் 08,2011,22:51 IST

விருத்தாசலம் : விருத்தாசலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைகழகம் சார்பில் வேளாண் சந்தைப்படுத்துதல் குறித்து ஒரு நாள் விழிப்புணர்வு பயிற்சி நடந்தது. வேளாண்மை அறிவியல் நிலைய இணை பேராசிரியர் சுப்ரமணியன் தலைமை தாங்கினார். வேளாண் விற்பனை துறை அலுவலர்கள் அமுதா, நந்தினி முன்னிலை வகித்தனர். ஜெய்ப்பூர் தேசிய வேளாண் விற்பனை நிறுவன அலுவலர் ரங்கசாமி மத்திய வேளாண்மைத் துறை அமைச்சகத்தால் செயல்படுத்தப்படும் வேளாண் சந்தைப்படுத்துதல் திட்டங்களையும், மத்திய சேமிப்பு கிடங்கு மேலாளர் அண்ணா துரை மத்திய சேமிப்பு கிடங்கு, வேளாண் பொருட்கள் சேமிப்பு மற்றும் நவீன சேமிப்பு கிடங்கு பற்றி விளக்கினார். மேலும், வேளாண் விற்பனை துறை செயல்பாடுகள் மற்றும் திட்டங்கள், உழவர் சந்தை செயல்பாடுகள் பற்றி விளக்கப்பட்டது. வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானி கண்ணன் அறுவடைக்கு பின் வேளாண் பொருட்கள் பதப்படுத்துதல் பற்றிய தொழில் நுட்ப கருத்துகளை எடுத்துரைத்தார். விஞ்ஞானி ராஜி நன்றி கூறினார்.

தினகரன்

**மழையால் தக்காளி அழுகல் கிலோ ரூ.40க்கு விற்பனை**

பதிவு செய்த நாள் : 11/9/2011 0:22:53



உடுமலை: கிராமங்களில் விளைவிக்கப்படும் நாட்டு தக்காளிகள் அதிகளவில் உடுமலை சந்தைக்கு கொண்டு வரப்படுகின்றன. கனமழையால் தோட்டங்களில் தண்ணீர் தேங்கி தக்காளி செடிகள் மூழ்கி விட்டன. தக்காளி பழங்கள் செடியிலேயே அழுகிவிட்டன. இதனால் சந்தைக்கு தக்காளி வரத்து வெகுவாக குறைந்தது.

வழக்கமாக 10 டன்னுக்கும் அதிகமாக வரத்து இருக்கும். நேற்று 4 டன் தக்காளிதான் விற்பனைக்கு வந்தது. வரத்து குறைந்ததால் விலை உயர்ந்தது. 15 கிலோ கொண்ட ஒரு பெட்டி நாட்டு தக்காளி ரூ.600க்கும், ஒரு கிலோ ஸி40க்கும் விற்றது. சில நாட்கள் முன்பு வரை பெட்டி ரூ.200 முதல் ரூ.250 வரையும், கிலோ ஸி16க்கும் விற்றது. தொடர்ந்து விலை உயர வாய்ப்புள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## சித்தூர் தாலுகாவில் 2 ஆயிரம் ஏக்கர் நெற்பயிர்கள் நாசம் நிலம்பதி பாலங்கள் நீரில் மூழ்கின

*கொழிஞ்சாம்பாறை, நவ.9–*

*சித்தூர் தாலுகாவில் பெய்த தொடர் மழையால் 2 ஆயிரம் ஏக்கர் நெற்பயிர்கள் நாசம் அடைந்தன. மூலத்தரை அணையில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவதால் நிலம்பதி பாலங்கள் நீரில் மூழ்கின.*

*நிலம்பதி பாலங்கள் மூழ்கின*

*பாலக்காடு மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக தொடர் மழை பெய்தது. தொடர் மழையின் காரணமாக பாலக்காடு மாவட்டத்தில் உள்ள அனைத்து அணைகளும் வேகமாக நிரம்பி வருகின்றது. குளங்கள், குட்டைகள், ஆறுகளிலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு உள்ளது.*

*சித்தூர் தாலுகாவில் விடாமல் பலத்த மழை கொட்டியது. இதன் காரணமாக தாலுகா முழுவதும் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நெற்பயிர்கள் நீரில் மூழ்கின. மூலத்தரை அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டு உள்ளது. இதனால் கருவப்பாறை, மீனாட்சிபுரம், ஆலங்கடவு, கொடும்பு ஆகிய நிலம்பதி பாலங்கள் நீரில் மூழ்கின.*

*வீடுகளுக்குள் வெள்ளம்*

*இதை தொடர்ந்து கொழிஞ்சாம்பாறை, சித்தூர், பாலக்காடு, பொள்ளாச்சி பகுதிகளுக்கு போக்குவரத்து நிறுத்தப்பட்டது. எருத்தேன்பதி பாலத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதால் பழனியார்பாளையம், சத்திரம், கன்னியம்பாறை பகுதிகளுக்கு பஸ் போக்குவரத்து நிறுத்தப்பட்டது.*

*அதே போல் சித்தூர் ஆற்றின் கரையோர பகுதிகளில் உள்ள நூற்றுக்கணக்கான வீடுகளுக்குள் மழை வெள்ளம் புகுந்தது. இதனால் அந்த வீடுகளில் வசிப்பவர்கள் மழைநீரை இறைத்து வெளியே கொட்டினர்.*

*இது போல் ஆலத்தூர், நெம்மாரை, கொல்லங்கோடு, வடக்கன்சேரி பகுதியில் நூற்றுக்கணக்கான ஏக்கரில் ரப்பர் மரங்கள் வேரோடு சாய்ந்து விழுந்தன. மேனோன்பாறை நிலம்பதி பாலம் ஆற்றில் வந்த வெள்ளப்பெருக்கால் மூழ்கியது. இதனால் கோவை–சித்தூர் ரோட்டில் போக்குவரத்து நிறுத்தப்பட்டது. தொடர்ந்து மழை கொட்டியதால் சித்தூர் அருகே விவசாயத்திற்காக கட்டப்பட்ட பொன்புள்ளி யானைப்பாடம் தடுப்பணை உடைந்தது, இதனால் தடுப்பணையில் தேங்கி வைக்கப்பட்டு இருந்த தண்ணீர் வெள்ளம் போல் வெளியேறியது தடுப்பணை அருகே கட்டப்பட்ட இருந்த 30–க்கும் மேற்பட்ட வீடுகளில் வெள்ளம் புகுந்தது.*